## சாத்தந்தை கூட்டம்

சாத்தன் என்ற கொங்கன் கால்வழித் தோன்றிப் பெருகி வளர்ந்த மக்களுக்கு சாத்தந்தை குலம் என்று பெயர் ஏற்பட்டது. இப்பெயர், சாத்தன் + தந்தை என்ற தொல்காப்பிய இலக்கண விதிப்படி ஏற்பட்ட பெயராகும் (தொல்காப்பியம்-விதி-347)

சாத்தந்தைகுலம், கொங்கு வேளாளர் இனத்திற்கு கூடுதல் பெருமையை தேடித் தந்தகுலமாகும். கொங்கு வேளாளர், கொங்கு நாட்டின் எல்லைக்குள் நூற்றுக்கணக்கான போர்களில் ஈடுபட்டனர். ஆனால், சாத்தந்தை குலத்தினர் கொங்கு நாட்டின் எல்லையைத் தாண்டி



திருநெல்வேலி, குடகு, மலையாள தேசம், ஆகிய அயல் நாடுகளில் போர் புரிந்து வெற்றி பெற்ற பெருமையை உடையவர்கள் ! காளிங்கராயர் என்ற சாத்தந்தை குலத் தலைவர் பவானி ஆற்றின் குறுக்கே அணைகட்டி, வாய்க்கால் வெட்டி, அந்த வாய்க்கால் நீரை சாத்தந்தை குலத்தினர் குடிக்கக்கூடாது-என்றும் வாய்க்கால் நீர் பாய்ந்த வயல் வெளிகளில் விளைந்த நெல்லைச் சாப்பிடக் கூடாது என்றும் நீதிமுறை வகுத்து, வாய்க்காலை பொது மக்கள் நன்மைக்காக கொடையாகக் கொடுத்தவர். இது தியாகத்தின் உச்ச வரம்பு. இந்திய நாட்டு வரலாற்றில், வேறு எங்கும் காண இயலாத அதிசயமான தியாகமாகும். மேலும், ஒரு சாண் மண்ணுக்காக உறவினர்களையே வெட்டி வீழ்த்தும் கொங்கு சாதியில் பிறந்து 56½ மைல் நீளமுள்ள வாய்க்காலை மக்களுக்கு தர்மமாக கொடுத்தது அறத்துறையில் அதிசயிக்க தக்க சாதனையாகும்.

சாத்தந்தை குலத்தினரின் பூர்வீக காணி-ஆத்திப நல்லூர், அவ்வூர், தென்கரை ராஜகம்பீர வள நாட்டில் அமைந்திருந்த ஊராகும். கலியுகம் 1051ல் ஆத்திப நல்லூரில் சாத்தந்தை குலத்தினர் வாழ்ந்ததாக கொங்கு மண்டல சதகம் (கொ. ம.ச. வ.) குறித்துள்ளது. ஓதாளர் குறவஞ்சியும் சாத்தந்தை குலத்தினர், ஆத்திப நல்லூரில் வாழ்ந்ததாக குறித்துள்ளது.

கொங்கு நாட்டில், கரூர் அருகேயுள்ள நாகம்பள்ளி சாத்தந்தை குலத்தினர், காணி கொண்ட ஊர்களில் ஒன்றாகும். நாகம் பள்ளி வட்டாரத்தில் வாழ்ந்துவரும், சாத்தந்தை கூட்டத்தினர், ஆதி-அந்துவன் குலத்தினர், குலதெய்வமாக கொண்டாடிவரும், செல்லாண்டியம்மன், அணை கருப்பண்ண சாமியை குலதெய்வமாக வழிபட்டு வாழ்ந்து வருகின்றனர்.

சாத்தந்தை குலத்தினர், காணிகொண்ட நகரங்களில் காங்கேய நகரமும் ஒன்றாகும். காங்கேயம் காணிப் பாடலில் (காங்கேயத்தின் பழைய பெயர்—சிங்க நகர் என்று

குறிக்கப்பட்டுள்ளது) ஐந்தாவது காணியாளர்களாக குறிக்கப்படுகின்றனர். காங்கேயம், பல்லவராயர் பட்டம் ஏந்திய செங்கண்ண கூட்டத்தினர் அரசு செலுத்திய பூர்வீக நகரமாகும். காங்கேயத்தில் எழுந்தருளியிருக்கும் அகத்தீஸ்வரர், ஆயி அம்மன், பகவதியம்மன் கோயில்களில் காணி உரிமை கொண்ட சாத்தந்தை குலத்தினர், சிறப்புக்கு உரிய குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

ஐந்து சாதி வரலாறு என்னும் பழஞ்சுவடி, ''பூந்துறை நாடு பூந்துறைப் பட்டணம் வாசஞ் செய்துக்கொண்டு சேரமான் பெருமான் இருந்து ராஜ்யம் செய்துக்கொண்டிருந்தார்'' என்றும் அச்சேரன் திருக்காளத்தி மலைப் பகுதியிலிருந்து வேடர்களை அழைத்து வந்து பூந்துறை நாட்டில் குடியேற்றினார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சாத்தந்தை குலத்தினர் போர் புரிந்து பூந்துறை நாட்டில் ஆதிக்கம் செலுத்திய வேடர்களையும் வேட்டுவர்களையும் வென்றனர். வெள்ளோடு ராசாகோயில் ராசாக்கள், பூந்துறை நாட்டை ஆண்ட ராசாக்களே! 'எட்டுத்திக்கு மதிக்கவரு பல்லக்கில் பவனி வரும் தண்டிகை துரையான எங்கள்குல ராசாக்கள்' என்ற தொடர். பூந்துறை நாட்டை ஆண்ட ராசாக்களையே குறிக்கும். சாத்தந்தை கூட்டம், உலகபுரம் காணியில் 111 ஊர்களையும், கனகபுரம் காணியில் 53 ஊர்களையும் தேவணாம்பாளையம் காணியில் 43 ஊர்களையும் கொண்ட பெரிய நிலப்பரப்பாகும். வடமுகம், தென்முகம் சாத்தந்தை என்ற பிரிவிகளும் உண்டு. இந்த வட்டார அருமைப் பெரியவர் கே. சி. சுப்பையா சமுதாய நலப் பணிபுரிந்து பெருமை பெற்றவர். காளிங்கராயர் காளி + லிங்கன் + அரையன் என்ற சொற்களின் சேர்ந்த வடிவமாகும். லிங்கன் என்பது வெள்ளோட்டில் எழுந்தருளியுள்ள சர்வலிங்க ஈஸ்வரர் பெயராகும். அரையன் என்பது பாண்டிய மன்னர் கொடுத்த பட்டமாகும். காளி என்பது அன்னை பராசக்தியான தேவியைக் குறிக்கும். கி. பி. 1215 முதல் பாண்டியநாடு. பெரிய சாம்ராஜ்யமாக பெருகி, வளர்ந்து 150 ஆண்டுகள் தென் நாட்டில் ஆதிக்கம் செலுத்தியது. அந்த கால கட்டத்தில்



பூந்துறைநாடு. வெள்ளோடு காளிங்கராயர் கொங்கு நாட்டின் நிர்வாக அமைச்சராகவும், படைத்தலைவராவும் ஓங்கி உயர்ந்தார். பூந்துறை நாட்டில், கவுண்டச்சிபாளையம், எலவமலை, வெள்ளரிவெளி, ஆகிய ஊர்கள் சாத்தந்தை கூட்டத்தினர் காணியாளர்களாக ஆட்சிபுரிந்த ஊர்களாகும்.

பூந்துறை நாட்டுக்கு அடுத்த நாடான குறும்பு நாட்டில் சாத்தந்தை கூட்டத்தினர், குறுநில மன்னர்களாய், படைத் தலைவர்களாய் ஆட்சிபுரிந்தனர். குறும்பு நாட்டில், குன்னத்தூர், விஜயமங்கலம். ஆகிய ஊர்களை தலைநகராக கொண்டு, சாத்தந்தை குலத்தினர், பல அறச்செயல்களைப் புரிந்தனர். முடிகொண்ட சோழமாராயன் என்ற பட்டத்துடன் இப்பகுதியை ஆட்சிபுரிந்த சிறியான் தேவன் என்ற சாத்தந்தை குலத்தாளி புகழேந்திய மன்னராவார். சாத்தந்தை குலத்தில் பிறந்து, ஆய்வுத்துறையில் புகழேந்திய புலவர், செ. ராசு ''வெள்ளோடு சாத்தந்தை குலம், இராசாக்கள் வரலாறு'' என்ற நூலையும், ஊத்துக்குழி காளிங்கராயர் புகழாரம் பாடும் ''காலிங்கராயன் கால்வாய்'' என்ற நூலையும் எழுதியுள்ளார். விரிவான செய்திகளை படிக்க விரும்புவோர் அவரின் நூல்களில் காணலாம். குறும்பு நாட்டிற்கு அடுத்த நாடு—காஞ்சிகோயில் நாடு. அந்த நாட்டில் கூகலூர், சாத்தந்தை குலத்தினர் காணிகொண்ட ஊராகும். அப்பகுதியில் பல அறச்செயல்களை புரிந்துள்ளனர். கோபி வட்டாரத்தில், சாத்தந்தை குலத்தினர் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நூற்றாண்டில், கொங்கு சமுதாய பாதுகாவலராக விளங்கிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ. கே. காளியப்ப கவுண்டர் சாந்தத்தை குலத்தில் பிறந்தவராவார்.

சரவணபூபதி ஆத்திப நல்லூரில் வாழ்ந்த சாத்தந்தை குலப்படைத் தலைவன், கொடுவாய் போரில், துணைப் படையுடன் வந்து பகைவர்களை வென்று, உகாயனூர், அல்லாளபுரி பகுதிகளை கைப்பற்றினான். அவனுடைய வீரதீர சாதனையைப் பாராட்டி உறையூர் சோழன், 'உலகுடைய மன்றாடி'ப் பட்டம் கொடுத்து பெருமைப் படுத்

தினான். காலப்போக்கில் சாத்தந்தை குலத்தினர், மேற்குத் தொடர்ச்சி மலைவரை பல ஊர்களை வென்று காணியாளர்களாக ஆட்சி புரிந்தனர். கொங்குத் சோழன், வீரராஜேந்திரன் காலத்தில், சாத்தந்தை குல குறுநில மன்னர், 'பிள்ளான் தேவன்' என்ற பட்டத்துடன் கொங்கூர் பகுதியை ஆட்சிபுரிந்தான் (கல்வெட்டு எண் 66/1920) காலப்போக்கில், சாத்தந்தை குலத்தாளிகள் கொங்கு நாட்டின், தென்பகுதிகளிலும் காணியாளர்களாய் ஆட்சி புரிந்தனர். பாண்டிய சாம்ராஜ்யம், சரிந்து, சுருங்கி, விஜய நகர சாம்ராஜ்யத்திற்கு கப்பம் கட்டும் இழிநிலைக்கு வந்ததும், வெள்ளோடு காளிங்கராயக் கவுண்டர் சேர மன்னர் தன்னுடைய முன்னோர்களுக்கு அளித்த காணி நாடான காவடிக்கால் நாட்டிலேயுள்ள ஊற்றுக்குழிக்கு குடியேறினார். ஊற்றுக்குழியை (பொள்ளாச்சி வட்டாரம்) செல்வம் கொழிக்கும் திருநாடாக மாற்றியமைத்தார். கடல் உப்பை தவிர, சகல பொருள்களும் விளையும் செழிப்பான நாடாக்கினார். ஆனைமலை சரிவில், யானைகளைப் பிடித்து பழக்கி, பெரிய யானைப் படையை உருவாக்கினார். யானைப் படை, குதிரைப் படை, காலாள் படை, வெடிப் படை ஆகிய சதுரங்க சேனைகளுக்கு மாபெரும் தளபதியானார். விஜயநகர சாம்ராஜ்யம் (மான்சப்தாராக) மாபெரும் படைத் தலைவராக ஏற்றுக் கொண்டது. அடுத்து வந்த மதுரை நாயக்க மன்னர்கள் ஆட்சியில், மாபெரும் பாளையமாக ஊற்றுக்குழி விளங்கியது. மதுரை நாயக்க அரசிடமிருந்து கொங்கு நாட்டை கைப்பற்றிய மைசூர் அரசு, காளிங்கராய கவுண்டரை ஏற்றிப் போற்றியது. மைசூர் மன்னருக்காக குடகுநாட்டை சூறையாடிய காளிங்கராயர் அந்நாட்டு மன்னரை சிறைப்பிடித்துக் கொடுத்தார். மைசூருக்காக மலையாள தேசத்தில் பல பகுதிகளை கைப்பற்றிக் கொடுத்தார். மைசூர் ஆட்சியை கைப்பற்றிய அயிதர்அலியும் திப்புசுல்தானும், ஊற்றுக்குழிபாளையத்தை மட்டம்தட்டி அடிமைப் படுத்தினர். ஆனால், காளிங்கராயக் கவுண்டர், ஆங்கிலோய கம்பெனியுடன் கூட்டணி அமைத்து, திப்புசுல்தானைக் கொன்று, ஊற்றுக்குழிபாளையத்தை மீட்டுக் கொண்டார்.



சாத்தந்தைகளில், பொங்கல் வைக்காத சாத்தந்தை மலை மந்திரி பாளையம் பகுதியில் வாழ்கின்றனர். பந்தல் போடாத சாத்தந்தை என்ற மற்றொரு கிளைப் பிரிவும் உண்டு. இன்னும் பல உட் பிரிவுகள் உள்ளன. காலத்திற்கு காலம், தன் மானம் காத்து, தலைநிமிர்ந்து, கொக்கரிப்புடன் வீரஇனமாக, வாழ்ந்து காட்டியது சாத்தந்தை கூட்டம்.

காணி : ஆத்திபநல்லூர், நாகம்பள்ளி, காங்கேயம், வெள்ளோடு, விஜய மங்கலம், உலகபுரம், கனகபுரம், தேவணாம்பாளையம், உகாயனூர், அல்லாளபுரி, கொங்கூர், ஊற்றுக்குழி, கூகலூர், குன்னத்தூர், இன்னும் கொங்கு நாட்டில் நூற்றுக்கணக்கான ஊர்கள்.

காணி தெய்வம் : அகத்தூர் அம்மன், வெள்ளோடு ராசாகோயில், சர்வலிங்க ஈஸ்வரர், பொன் காளியம்மன், செல்லாண்டியம்மன், கருமலையான், அங்காளம்மன், அத்தனூர் அம்மன்.